பன்றி வளர்ப்புப் பண்ணைகள்

*21 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் நமது மாநிலத்தில் பன்றி வளர்ப்புப் பண்ணைகள் எத்தனை துவக்கப்பட இருக்கிறது?

(இ) அவைகள் எங்கெங்கு அமைக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஒன்று.

(இ) அலமாதி (செங்கற்பட்டு மாவட்டம்.)

(a) One.

(b) Alamadhi (Chingleput District).

திரு. து. ப. அழகமுத்து : சார், இந்தப் பண்ணைகள் சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா இருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன்: சர்க்கார் துறையில்தான். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் முன் வந்தால் அவர்களிடமும் கொடுக்கப்படும்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இந்தப் பன்றிப் பண்ணைகள் நாட்டுப் பன்றிப் பண்ணைகளா அல்லது சீமைப் பன்றிப் பண்ணைகளா ? இது வரை வைத்திருக்கும் பண்ணைகளிலிருந்து எவ்வளவு லாபம், நன்மை கிடைத்திருக்கிறது என்று அமைச்சர் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தப் பன்றிகளெல்லாம் ஊர் சுற்றிப் பன்றிகள் அல்ல ; இவை சைவப் பன்றிகள்.

திரு. சா. கணேசன் : எல்லாப் பன்றிகளும் சைவப் பன்றிகள் தான், மாமிசப் பன்றிகளே கிடையாது.

கனம் திரு. பூ. கக்கன் : நல்ல லாபம் என்றுதான் நினைக்கிறேன். விவரங்களுக்குத் தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. கே. ஆர். ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம் : சார், இந்த பன்றிகள் காம்பவுண்டுக்குள்ளேயே வைக்கப்படுகின்றனவா அல்லது வெளியிலேயும் அனுப்பப்படுகின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : சாதாரணமாக காம்பவுண்டுக்குள் தான் வைத்திருப்பார்கள். சில சமயங்களில் கொஞ்சம் பக்கத்தில் வெளியிலும் விடுவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்தப் பன்றிப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படும் நோக்கம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : யார் யாருக்கு பன்றிக்கறிமேல் பிரியம் இருக்கிறதோ அவர்கள் வாங்கிச் சாப்பிடலாம். அதோடு, நாட்டுக்கும் நன்மை. லாபம் வரவேண்டும் என்றுதான் இவை வைக்கப்படுகின்றன.

20th January 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது இந்தப் பண்ணைகளில் இருக்கும் பன்றிகளின் மொத்த எண்ணிக்கை என்ன என்று குறிப்பிடமுடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எண்ணிக்கை விவரம் இல்லை ; எந்தெந்த இடத்தில் பண்ணைகள் இருக்கின்றன என்ற விவரம் மட்டும் இருக்கிறது.

* * * *

Prohibition

* 22 *Q.*—SRI A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to abolish prohibition in the State?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், மது வகைகளில், கள் அதிகப் போதை இல்லாதது ; அது ஒரு சிறந்த உணவாகவும், மருந்துப் பொருளாகவும் இருப்பதால், கள் மட்டும் கிடைக்க, கள்ளுக் கடைகள் திறக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கள்ளால்தான் குடியெல்லாம் கெட்டது. கள்ளுக்கடை திறப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு லைசென்சுகள் தாராளமாகக் கொடுக்கப்பட்டிருக் கின்றனவா அல்லது சிக்கனமாக வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவரவர்களுடைய நிலைமையைப் பார்த்து கொடுக்கப்படுகிறது. நோயாளிகளாக இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும். வெறுமனே பிஸினஸ் பண்ண என்று வந்தால் அதை மறுத்துவிடுகிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : கள் வேண்டுவோர் மாநாட்டில் இது சம்பந்தமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட் டிருக்கின்றனவா ? அதன் விவரம் என்ன ? 9-00 a.m.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இப் பொழுது இல்லை.

திரு. இராம அரங்கண்ணல் : நான் கேட்ட கேள்வியினுடைய நோக்கம் சர்க்கார் லைசன்ஸ் வழங்குவதில் தாராளமான கொள்கையைக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அனுசரிக் கறதா என்பதாகும். அதற்கு அமைச்சர் அவர்களிடமிருந்து நேரடியான பதிலை விரும்புகின்றேன்.

கனம் திரு. பூ. கக்கன் : வியாதிக்கு மருந்து என்ற வகையில் கோருகிறவர்களுக்கு இது மெடிகல் சர்ட்டிபிகேட் பேரில், கொடுக் கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் தாராளமாக

**** Expundged as ordered by the chair.